

# இயக்கத்தின் தாக்கமும் இளைஞர் எழுச்சியும்

தலைவர் கலைஞர்

# இயக்கத்தின் தாக்கமும் இளைஞர் எழுச்சியும்

## தலைவர் கலைஞர்

தி.மு.க. அறக்கட்டளை
பேராசிரியர்
ஆய்வக நூல்
நிலையம்
சென்னை-18
அண்ணா அறிவாலயம்

வெளியீடு:

**தி.மு.க. இளைஞர் அணி**

"அன்பகம்"

614, அண்ணா சாலை,

சென்னை - 600 018.

முதற்பதிப்பு : மார்ச் 2001

விலை : ரூ. 2/-

## இந்நூல் ...

2001 மார்ச் 3 அன்று திருச்சியில் நடைபெற்ற தி.மு.க. இளைஞர் அணி மாவட்ட அமைப்பாளர்கள் - துணை அமைப்பாளர்கள் கூட்டத்தில் தலைவர் **கலைஞர்** அவர்கள் ஆற்றிய உரையினை **'இயக்கத்தின் தாக்கமும் இளைஞர் எழுச்சியும்'** என்கிற தலைப்பில் நூல் வடிவில் பெருமையுடன் வெளியிடுகிறோம்.

18262

- தி.மு.க. இளைஞர் அணி



# இயக்கத்தின் தாக்கமும் இளைஞர் எழுச்சியும்

நாம் நிறைவேற்றிய வேலைகள் மேலும் தொடர வேண்டும். வேறொருவர் வந்தால் அத்தகைய திட்டங்கள் நடைபெறாது என்பதை மக்களுக்கு எடுத்துச் சொல்லுங்கள். இப்போது பின்னப்படும் சூழ்ச்சிகளை அறுத்தெறிய வேண்டிய கட்டாயம், கடமை நமக்கிருக்கிறது. எனவே ஒன்றுபட்டு ஒற்றுமையுணர்வோடு அந்தத் தொண்டினை நீங்கள் ஆற்றிட வேண்டும்.

மாநில அளவில் இளைஞர் அணி நிர்வாகிகள் கூட்டம் கூட்டப்பெற்று எதிர்காலத்தில் செய்து முடிக்க வேண்டிய, செய்யத் தொடங்கிட வேண்டிய பணிகளைப் பற்றி ஆராய்ந்திட இங்கே நீங்களெல்லாம் கூடியிருக்கிறீர்கள். உங்களைச் சந்திக்கின்ற அருமை வாய்ப்பினை நானும் பெற்றிருக்கிறேன். இளைஞர் அணி தோன்றிய நாள், தோன்றிய காரணம், தோன்றிய காலந்தொட்டு அது ஆற்றி வருகின்ற தொண்டு இவைகளைப்பற்றியெல்லாம் தம்பி ஸ்டாலின் இங்கே விளக்கமாக எடுத்துக் கூறினார்.

## நமது சமுதாயத்தின் எதிர்காலம் பற்றி இளைஞர்கள் எண்ணிட வேண்டும்

இவ்வளவு காலம் ஆற்றிய பணிக்கும், எடுத்துக்கொண்ட முயற்சிகளுக்கும், நமக்கு தொடர் வெற்றிகள் கிடைத்திருந்தாலும் கூட இவைகளெல்லாம் வருகிற தேர்தலில்,

இந்த இடைக்காலத்தில் யாருடைய சூழ்ச்சியிலாவது பாழ்பட்டு போய்விடும் என்கின்ற கவலை இல்லாமல் இல்லை. பொதுவாக நான் இளைஞர்களுக்கு சொல்கின்ற அறிவுரை தேர்தல், ஆட்சி, பதவி இவைகளிலே நாட்டம் செலுத்தாமல் நம்முடைய முழு நினைப்பும் இந்த சமுதாயத்தின் எதிர்கால நல்வாழ்வுக்காக – இந்தச் சமுதாயம் அறிவொளி பாய்ச்சிடுகின்ற சமுதாயமாக இருந்திட வேண்டும் என்கின்ற நோக்கம் நிறைவேறுவதற்காக இருந்திடல் நன்று என்று நான் பல நேரங்களிலே சொல்லியிருக்கின்றேன். இன்றைக்கு நாம் அதை மறந்துவிட வில்லை. ஆனாலும் கூட இதையெல்லாம் செய்வதற்கு சமுதாயத்திலே அறிவு புகட்டிட, சமத்துவம் ஓங்கிட, சமதர்மம் நிலைத்திட ஆற்றிட வேண்டிய அரும்பணிகளுக்கு எந்த இயக்கம் நிலைபெற்று இருக்க வேண்டும் என்று நான் கருதுகின்றேனோ அந்த இயக்கத்திற்கு ஒரு ஆபத்து வந்து விடுமேயானால் அப்படித் தொடர்ந்து அந்த முயற்சிகளிலே ஈடுபட யாரும் இருக்க மாட்டார்கள்.

உதாரணமாக உங்களிலே பலருக்கு நன்றாகத் தெரியும், சில பேர் இளைஞர்களாக அந்தக் காலகட்டத்தில் இருந்திருப்பீர் கள். 1960 ஆம் ஆண்டு வாக்கில் இந்தியாவிலேயே திராவிட முன்னேற்றக் கழகத்தைப் பற்றி ஒரு அச்சம் மத்தியிலே உள்ளவர்களுக்கு ஏற்பட்டு, இந்தக் கழகம் இப்படியே வளர்ந்து கொண்டு போனால் இந்தப் பிரச்சாரம் இப்படியே வளர்ந்து கொண்டு போனால், ஒருவேளை தமிழ்நாட்டை அல்லது திராவிட நாட்டை தனியாகப் பிரித்து விடுவார்கள் என்கின்ற ஒரு அச்சம் மத்தியிலே உள்ளவர்களுக்கு ஏற்பட்டது.

திராவிட முன்னேற்றக் கழகமோ, அல்லது அதனுடைய நிறுவனத் தலைவர் பேரறிஞர் அண்ணா அவர்களோ இந்தியாவினுடைய ஒற்றுமையை, பலத்தை சீர்குலைக்க வேண்டுமென்று என்றைக்கும் எண்ணியது கிடையாது. நாம் கேட்ட பிரிவினை வடக்கேயுள்ள நிலைமைகளையும், தெற்கே ஏற்படுகின்ற சீரழிவுகளையும் ஒப்பிட்டுக்காட்டி இதை சமன் செய்ய வேண்டும், இல்லாத பட்சத்தில் எங்களை நாங்களே ஆண்டுகொள்ள உரிமை அளிக்க வேண்டும் என்றுதான் நாம் நம்முடைய கோரிக்கையை அன்றைக்கு அழுத்தந்திருத்தமாக வலியுறுத்தினோம். கோரிக்கையைப் பற்றிக் கவலைப் படாமல், கோரிக்கையை எழுப்புகின்றவர்களையே அழித்து விட்டால் என்ன என்ற எண்ணத்தோடு அன்றைக்கு சிலர் யோசனை செய்து அதற்காக ஒரு குழு அமைத்து திராவிட முன்னேற்றக் கழகத்தையே அழிப்பதற்கு திராவிடம் என்று பேசினால், திராவிட நாடு என்று பேசினால் அந்தக் கட்சியே செயல்படக் கூடாது. அப்படிப் பேசுகின்றவர்கள் நாடாளுமன்றத் தேர்தலிலோ, சட்டமன்றத் தேர்தலிலோ நிற்பதற்கு அனுமதி கிடையாது. பத்தாண்டு காலம் அவர்களுக்கு சிறைவாசம். அந்தக் கட்சிக்கும் அனுமதி கிடையாது. தடை செய்யப்படும் என்ற வகையிலே ஒரு சட்டத்தை இயற்றி அந்தச் சட்டத்தைப் பற்றி யோசித்து முடிவெடுக்க ஒரு குழுவை அமைத்து, அந்தக்குழுவின் முடிவை அவர்கள் செயல்படுத்துகின்ற ஒரு காலகட்டத்திலேதான் அறிஞர் அண்ணா அவர்கள் கழகத்தின் பொதுக்குழுவைக் கூட்டி

1952 ஆம் ஆண்டு திராவிட முன்னேற்றக் கழகம் தேர்தலிலே நிற்கப் போவதில்லை என்று அறிவித்து, பிறகு 57 ஆம் ஆண்டு தி.மு.க. தேர்தலில் நிற்குமென்று அறிவித்து 15 இடங்களில் வெற்றி பெற்று, அதன் பின்னர் 1962 ஆம் ஆண்டு 50 இடங்களிலே தி.மு.க. வெற்றி பெற்றது.

அதனைத் தொடர்ந்து நடைபெற்ற திருவண்ணாமலை இடைத் தேர்தலிலே இந்தப் போட்டி கடுமையாக இருக்கிற தென்று இண்டர்னேஷனல் என்பார்களே அதைப்போல சர்வதேச அரசியலில் பேசப்பட்டு, திருவண்ணாமலையிலே முகாமிட்டு நான் ஒரு வீட்டிலே தங்கிக்கொண்டு, பெருந் தலைவர் காமராஜர் அவர்கள் செஞ்சியிலே அரசினர் விடுதியிலே தங்கிக்கொண்டு தேர்தல் வேலை வேகமாக நடைபெற்று காங்கிரசு வெற்றி பெறுமென்ற சூழ்நிலை மாற்றப்பட்டு திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய வேட்பாளர் நண்பர் ப.உ.சண்முகம் வெற்றி பெற்றார்.

அதற்குப் பிறகுதான் யோசிக்கத் தொடங்கினார்கள். இதுவரையிலே அவர்களை வேடிக்கைப் பார்த்துக் கொண்டிருந்தோம், அது தவறு, இவர்கள் பதினைந்து இடங்களிலே வெற்றி பெற்றிருந்தார்கள், 57–இல். 15 இடங்களிலும் தோற்கடிக்க வேண்டுமென்று எண்ணினோம், ஆனால் 50 இடங்களாக முளைத்து விட்டார்கள், இப்போது இந்த 50 இடங்களைத் தவிர இடைத் தேர்தலிலும் வெற்றி பெற்றிருக்கிறார்கள், எனவே இதை வளரவிடக் கூடாது, இப்போதே கிள்ளி எறிய வேண்டுமென்ற முயற்சிதான் பிரிவினைத் தடைச் சட்டம். இல்லாவிட்டால்

வடக்கேயுள்ள காங்கிரஸ்காரர்களுக்கு, அய்யோ நாடு பிரிந்து விடக்கூடாதே என்ற கவலை எதுவும் வந்து விடவில்லை. நாடு பலவீனப்பட்டு விடக்கூடாது என்று யாரும் கவலைப்பட்டதாக எடுத்துக் கொள்ளவும் முடியாது. திராவிட முன்னேற்றக் கழகம் வளரக் கூடாது, வளர்ந்தால் தமிழ்நாட்டில் காங்கிரஸ் கட்சிக்கு செல்வாக்கில்லாமல் போய் விடும், காங்கிரஸ் கட்சி ஆட்சி அமைக்க முடியாது, திராவிட முன்னேற்றக் கழகம் ஆட்சி அமைத்து விடும், 15 ஆக இருந்து, 50ஆக உயர்ந்து, இப்போது வரவிருக்கின்ற பொதுத் தேர்தலில் 67–இல் ஆட்சியைப் பிடித்தாலும் பிடித்து விடுவார்கள், அதைத் தடுக்க வேண்டும் என்பதற்காகத்தான் பிரிவினை கேட்டால் தடைச் சட்டம் என்றார்கள்.

## கழகத்தைக் காப்பாற்றிட அண்ணா எடுத்த முடிவு

அப்போதுதான் அண்ணா எங்களையெல்லாம் கலந்தாலோசித்தார், அந்த ஆலோசனையின் முடிவில் அண்ணா, பொதுக்குழுவைக் கூட்டி, கழகம் இருந்தால்தான் நம்முடைய கோரிக்கைகளுக்காக நாம் போராட முடியும். நம்முடைய குறைகளை எடுத்துச் சொல்ல முடியும், தமிழ்ச் சமுதாயத்திற்காக வாதாட முடியும், அவர்களுக்காக நாம் களம் புக முடியும், கழகமே அழிந்து விட்டால், என்ன செய்ய முடியும்? ஆகவே நம்முடைய முதல் வேலை கழகத்தைக் காப்பாற்றுவதுதான். தன்னைக் காப்பாற்றிக் கொள்ள அல்ல, அண்ணாவைக் காப்பாற்றிக் கொள்ள அல்ல, கருணாநிதியைக் காப்பாற்றிக் கொள்ள அல்ல, பேராசிரியரைக் காப்பாற்றிக் கொள்ள அல்ல, எல்லோரும் சேர்ந்து

கழகத்தைக் காப்பாற்ற வேண்டும், இந்தக் கழகத்தைக் காப்பாற்றினால்அன்னியில் தமிழ்ச் சமுதாயத்திற்கு சமுதாய ரீதியாகவோ அரசியல் ரீதியாகவோ பணியாற்ற பாடுபட வேறு யாரும் தோன்ற மாட்டார்கள், தோன்றினாலும் அவர்கள் தொடக்கத்திலேயே அழிக்கப்பட்டு விடுவார்கள் என்று அண்ணா அவர்கள் தைரியமாக முன் வந்து பிரிவினைக் கோரிக்கையை விட்டு விட்டோம் என்று அறிவித்தார்கள்.

பிரிவினை கோரிக்கையை விட்டு விட்டோம் என்று அறிவித்த பிறகு பிரிவினையில் நாட்டமுள்ள இளைஞர் களுக்குக்கூட அதிர்ச்சி ஏற்படவில்லை. காங்கிரஸ்காரர் களுக்குத்தான் அதிர்ச்சி ஏற்பட்டது. அய்யோ, பிரிவினையை இவர்கள் கை விட்டு விட்டார்களே, இவர்கள் தப்பித்துக் கொண்டார்களே, என்று அதிர்ச்சி ஏற்பட்டது., பிரிவினை என்று வலியுறுத்திச் சொல்லியிருந்தால் என்றைக்கோ தி.மு.க. அழிக்கப்பட்டிருக்கும். தடை செய்யப்பட்டிருக்கும். எனவே மிகுந்த சாதுர்யமாக அண்ணா அவர்கள் அன்றைக்கு நடந்து கொண்டார்கள்.

மறைந்த தோழர் ஆசைத்தம்பி அவர்கள் அதைப்பற்றி கூட்டங்களிலே பேசுவார். பாரதத்தில் அர்ச்சுனனுடைய கணை, கர்ணனுடைய கணை என்ற இரண்டையும் ஒப்பிட்டுப் பேசும்போது கர்ணனுடைய கணை பாய்ந்தால் அர்ச்சுனன் நிச்சயமாக கொல்லப்படுவான். அப்படி கொல்லப்படாமல் தடுக்க கிருஷ்ண பரமாத்மா கர்ணனிடத்லே சென்று ஒரு முறைக்கு மேல் நீ உன்னுடைய கணையை வீசக் கூடாதென்று கேட்டுக்

கொண்டாராம். கர்ணன் சம்மதிக்கிறான். ஏனென்றால் அர்ச்சுனன் தன்னுடைய தம்பி என்று கர்ணனுக்கு தெரிந்து விட்டது. குந்தியினுடைய தரிசனத்தால், குந்தியின் சொல் கேட்டு ஒருமுறைக்கு மேல் தன் கணையைப் பயன்படுத்த மாட்டேனென்றுசொல்லிவிட்டான். யுத்த களத்தில் கர்ணன் அந்தக் கணையை, நாகாஸ்வரத்தை அர்ச்சுனன் மீது வீசினான். அது பறந்து வருகிறது, குறிபார்த்து வருகிறது. அர்ச்சுனனுடைய தலையைக் கொய்துவிட்டுப் போக வருகிறது. அந்த நேரம் பார்த்து கிருஷ்ணன், அவன் தான் அர்ச்சுனனுடைய தேர் சாரதி. அவன் தன் கால் விரலை வைத்து அழுத்தி, தேரின் சக்கரத்தை கீழே இறக்கினான். அது ரத்த சகதியில் கீழே புதையுண்டு போயிற்று. அந்தக் காரணத்தினால் குறி பார்த்து வந்த நாகாஸ்வரம் அர்ச்சுனனுடைய தலைக்கு நேராக வந்து. தேர்ச் சக்கரம் கீழே இறங்கியதால், அர்ச்சுனனுடைய கிரீடத்தை மாத்திரம் சாய்த்துவிட்டுப் போய் விட்டது. அர்ச்சுனன் தப்பி விட்டான். இரண்டாவது முறையாக அந்தக் கணையை விட முடியாது. அதனால் அர்ச்சுனன் கண்ணனின் தந்திரத்தால் அன்றைக்கு தப்பித்துக் கொண்டான்.

அதைப் போலத்தான் எப்படி தேர்ச்சக்கரத்தை கீழே இறக்கி அர்ச்சுனனுடைய தலைக்கு ஆபத்து வராமல், தலையிலே வைத்திருந்த கிரீடத்திற்கு ஆபத்து ஏற்பட்டு அர்ச்சுனன் தப்பித்தானோ. அதைப் போல அங்கே கண்ணன் செய்த வேலையை இங்கே நம்முடைய அண்ணன் செய்தார். (கைதட்டல்) அவர் என்ன செய்தாரென்றால் பிரிவினைத் தடைச் சட்டம் என்ற அந்தக் கணை வந்த நேரத்தில் திராவிட முன்னேற்றக் கழகத்தின் பிரிவினை வாதத்தை கீழே தாழ்த்தி, தலைக்கு வந்தது,

தலைப்பாகையோடு போயிற்று என்பதைப் போல நம்முடைய கழகத்தைக் காப்பாற்றினார். அப்படி காப்பாற்றப்பட்ட காரணத்தினால்தான் இன்றைக்கு திருச்சியிலே இளைஞர்கள் எல்லாம் கூடியிருக்கிறீர்கள், நான் உட்கார்ந்து உங்களிடையே பேசிக் கொண்டிருக்கிறேன். அப்படி காப்பாற்றப்பட்ட காரணத்தினால்தான் 1967–ஆம் ஆண்டு திராவிட முன்னேற்றக் கழக ஆட்சி தமிழகத்திலே உதயமாயிற்று.

தி.மு.க. ஆட்சி உதயமான காரணத்தினால்தான் இந்த மண்ணிற்கு தமிழ்நாடு என்று பெயர் வந்தது. தி.மு.க. ஆட்சி வந்த காரணத்தினால்தான் அண்ணா காலத்திலேயே சுயமரியாதை திருமணங்கள் சட்டப்படி செல்லுபடியாகும் என்ற சட்டம் அன்றைக்கு நிறைவேற்றப்பட முடிந்தது. தி.மு.க. ஆட்சி வந்த காரணத்தினால்தான் தமிழ்நாட்டிலே தமிழ், ஆங்கிலம் என்ற இரண்டு மொழித்திட்டம் தான். இந்திக்கு இங்கே இடம் இல்லை என்கின்ற திட்டவட்டமான முடிவை அறிவிக்க முடிந்தது. தி.மு.க. ஆட்சி மாத்திரம் இல்லை என்று வைத்துக் கொள்ளுங்கள். நாம் அந்தப் பிரிவினைக் கொள்கையிலேயே பிடிவாதமாக இருந்து தி.மு.க. தடை செய்யப்பட்டிருக்குமேயானால் இவைகள் எல்லாம் கிடைத்திருக்குமா ?

## இந்திய அரசியலை நிர்ணயிக்கின்ற அளவிற்கு ஒரு இயக்கும் சக்தியாக மாறி இருக்கிறது கழகம்

அண்ணாவிற்குப் பிறகு இங்கே சொன்னீர்களே, நம்முடைய ஆட்சியின் சாதனைகளை, அந்தச் சாதனைகளையெல்லாம் நிறைவேற்றியிருக்க முடியுமா ?

எனவேதான் கழகத்தைக் காப்பாற்ற வேண்டும் என்கிற அந்த பொறுப்புணர்வோடு அன்றைக்கு அண்ணா அவர்கள் வீண்பிடிவாதத்திற்கு இடம் தராமல் கழகத்தைக் காப்பாற்றினார்கள். அந்தக் கழகம் இன்றைக்கு இந்தியாவிலே இந்திய அரசியலை நிர்ணயிக்கின்ற அளவிற்கு ஒரு இயக்கும் சக்தியாக மாறி இருக்கின்றது.

நம்மைப் பொறுத்தவரையில் அழுத்தந்திருத்தமான கொள்கை உண்டு. நாம் இன்னொருவரோடு அணி அமைக்கின்ற காரணத்தினால் அந்தக் கொள்கைகளை என்றைக்கும் விட்டுவிடுவதில்லை. விட்டுவிட மாட்டோம். இப்போதுகூட பொருளாளர் பேசும்போது, நம்முடைய கலைஞர் மாத்திரம் பிராமணராகப் பிறந்திருந்தால், குடியரசுத் தலைவராக ஆகியிருப்பாரென்று சொன்னார். பிராமணராகப் பிறக்காத ஒருவரே, தாழ்த்தப்பட்ட சமுதாயத்தைச் சேர்ந்த ஒருவரே இன்றைக்கு குடியரசுத் தலைவராக ஆகியிருக்கிறாரென்றால் அதற்குக் காரணம் திராவிட இயக்கத்தினுடைய தாக்கம் என்பதை மறந்துவிடக் கூடாது. நான் அதற்குள் அதிகமாகச் செல்ல விரும்பவில்லை. திராவிட இயக்கத்தின் தாக்கம்தான் இன்றைய தினம் குடியரசுத் தலைவராக நாம் திரு. கே.ஆர்.நாராயணன் அவர்களைப் பெற்றிருக்கிறோம்.

'சங்கராச்சாரியாரை மாத்திரம் பார்த்திருந்தால்' என்று ஆர்க்காடு வீராசாமி சொன்னார். பார்க்கப் போகிறேன் 11ந் தேதி. நாங்கள் இரண்டு பேரும் ஒரு விழாவிற்குப் போகிறோம். அவ்வளவுதான். அந்த விழா கிராமங்களிலே உள்ள பூசாரிகள் தங்களுக்கென்று வாரியம் அமைக்க வேண்டுமென்று கோரிக்கை

வைக்கின்ற விழா. அந்தப் பூசாரிகளுக்காக அவர்களின் நலத் திட்டங்களுக்காக மதுரையிலே 10, 11 ஆகிய நாட்களிலே நடைபெறுகின்றது. 10 ஆம் தேதி அவர் செல்கிறார், 11 ஆம் தேதி நான் செல்கிறேன்.

## எங்கே நாம் சென்றாலும் கொள்கைகளை விட்டுவிடமாட்டோம்

எனவே எங்கே நாம் சென்றாலும் நம்முடைய கொள்கைகளை விட்டுவிடக் கூடியவர்களல்ல. விட்டுவிடவும் இல்லை. நம்முடைய கொள்கைகளை, நம்முடைய சமுதாய எண்ணங்களை என்றைக்கும் மனதிலே ஆழமாகப் பதிய வைத்துக் கொண்டிருக்கிறோம். அந்தப் பிடிவாதமும், உறுதியும் நமக்கு இருக்கின்ற வரையில் யாரும் எதுவும் செய்துவிட முடியாது. நாம் நாட்டுப் பிரிவினையை விட்டுவிட்டதற்குக் காரணமே அண்ணா அன்றைக்கு எடுத்துச் சொன்னதைப் போல வீடிருந்தால்தான் ஓடு மாற்றிக் கொள்ள முடியும். அதைப் போல நாடிருந்தால்தான் நம்முடைய கோரிக்கைகளை வைக்க முடியும். நாடு பலவீனப்படக் கூடாது. ஒரு பக்கத்திலே சீனாக்காரர்களுடைய தாக்குதல், இன்னொரு பக்கத்திலே பாகிஸ்தான்காரர்களுடைய தாக்குதல். இதற்கிடையே இந்தியா இருக்கின்ற நேரத்தில் பிரிவினை எண்ணம் யாருக்கும் வரக்கூடாது, உண்மைதான். ஆனால் அந்த எண்ணத்தை வைத்து ஒரு கட்சியை அழித்து விடச் சட்டம் கொண்டு வந்தால் அதற்கு நாம் இரையாகி விடக்கூடாது என்பதையும் அண்ணா அவர்கள் எடுத்துச் சொல்லி மிகச் சாதுர்யமாகச் செயல்பட்டு கழகத்தையும் காப்பாற்றினார், மாநிலத்தையும் காப்பாற்றினார். இன்றைக்கு நாட்டையும் காப்பாற்றக் கூடிய அளவிற்கு இந்த கழகத்தையும் வளர்த்திருக்கிறார்.

அப்படிப்பட்ட கழகம் அண்ணா அவர்கள் மறைவு என்கிற பேரிழப்பிற்குப் பிறகும் இன்றைக்கு வாழ்ந்து கொண்டிருக்கின்றதென்றால் உங்களைப் போன்ற இளைஞர்களுடைய உழைப்பும் ஆர்வமும்தான் அதற்குக் காரணம். அண்ணா விட்டுச் சென்ற கொள்கைகள், பெரியார் கற்றுத் தந்த இலட்சியங்கள் இவைகளையெல்லாம் நாம் நெஞ்சத்திலே ஆழமாகப் புதிய வைத்துக் கொண்டிருக்கிறோம். அதன் காரணமாகத்தான் இன்றைக்கு நம்மால் தமிழகத்திலே நடத்துகின்ற ஆட்சியைக்கூட தன்மானம் உள்ள ஆட்சியாக, சமுதாயத்திற்கு நன்மைகளை செய்யக்கூடிய ஒரு ஆட்சியாக நடத்த முடிகின்றது.

## குற்றச்சாட்டுக்களை திருத்திக்கொள்ள வேண்டும்

இந்த ஆட்சிக்கு இப்போது ஆபத்து வந்துவிட்டதா என்று ஒரு கேள்வி. இங்கே ஒரு இளைஞர் அணித் தோழர் பேசும்போது குறிப்பிட்டார். பொருளாளர் வீராசாமி அவர்களும் குறிப்பிட்டார். தினமணிப் பத்திரிகையில் தி.மு.கழகத்தின் வெற்றிக்கு சாதகமான காரணங்கள் என்னென்ன என்பதையெல்லாம் வரிசைப்படுத்தி வெளியிட்டு இருக்கின்றார்கள் என்று குறிப்பிட்டார். இந்த 5 ஆண்டு காலத்தில் தி.மு.கழக ஆட்சியில் எந்தவிதமான ஊழல் குற்றச்சாட்டும் இல்லை என்பது தினமணியின் முதல் பக்கத்திலே குறிப்பிடப்பட்டிருக்கிற வாசகம், சாதகத்தைப் பற்றிச் சொன்னேன். பாதகமாக என்ன குறிப்பிட்டிருக்கின்றார்கள் என்றால் தலைமை அளவில், மேலிடத்து அளவில் குற்றச்சாட்டுக்கள் இல்லையென்றாலும்கூட, கீழ்மட்டத்தில் அங்கொன்றும்

இங்கொன்றுமாக இப்படிப்பட்ட குற்றச் சாட்டுகளுக்கு இடமிருக்கிறது என்று குறிப்பிடப்பட்டுள்ளது. நான் அதைப் பற்றி எங்கெங்கே இருக்கிறது என்று பட்டியல் போட விரும்பவில்லை. இருந்தால் அவர்களெல்லாம் திருத்திக் கொள்ள வேண்டும்.

திருந்துங்கள் என்று சொல்கின்ற அந்த கடமையான உணர்ச்சியை நீங்கள் பெற வேண்டும். அந்தக் கடமையை நீங்கள் ஆற்ற வேண்டும். யார்? யார்? உங்கள் தொகுதியிலோ அல்லது ஊரிலோ இருக்கிறார்களோ அவர்களையெல்லாம் திருத்த வேண்டிய கடமையை இளைஞர் அணியில் இருக்கின்ற நீங்கள் ஏற்றுக்கொள்ள வேண்டும். அதற்காக நேரடியாகப் போய் மோதிக் கொள்ள வேண்டும் என்று சொன்னதாக, கலைஞரே அனுமதி கொடுத்துவிட்டார் என்று யாரும் கருதிக்கொள்ளக் கூடாது. இதமாக எடுத்துச் சொல்லுங்கள். ‘‘கலைஞர் எப்படியெல்லாம் கஷ்டப்படுகிறார்? தினமணியிலே இப்படி எழுதுகிறார்கள். நீங்கள் இப்படியெல்லாம் செய்கிறீர்களே? நியாயமா?’’ என்று கேளுங்கள். தவறு செய்பவர்களைப் பார்த்து கேளுங்கள். உங்களுக்குப் பிடிக்காதவர்களைப் பார்த்து கேட்காதீர்கள். தவறு செய்பவர்களைப் பார்த்துக் கேட்டு, அவர்களைத் திருத்த வேண்டும். அதுதான் நமக்கு பலம். தேர்தல் நேரத்தில் நீங்கள் செய்யவேண்டிய வேலைகளில் முக்கியமான வேலை இது.

இதை எடுத்துச் சொல்கின்ற நீங்களும் ஒழுங்காக இருக்க வேண்டும். ஏனென்றால், மூத்தவர்களெல்லாம் திடீரென்று முளைத்தவர்கள் அல்ல. இளைஞர்களாக இருந்து

முளைத்தவர்கள்தான் மூத்தவர்கள். அதனால் இளைஞர்களாக இருக்கும்போதே தூய்மையானவர்களாக இருந்து மூத்தவர்களாக ஆன பிறகும் தூய்மையானவர்களாக இருக்கக் கூடிய அந்த நிலை இந்த இயக்கத்திலே என்றைக்கும் நிரந்தரமாக இருந்திட வேண்டும்.

## தி.மு.க. ஆட்சியில் செய்துள்ளதை திண்ணைப்பிரச்சாரத்தில் சொல்லுங்கள்

அடுத்து பிரச்சாரம். பிரச்சாரத்தில் பல வகை உண்டு. அதை யெல்லாம் பற்றி பொருளாளர் இங்கே எடுத்துச் சொல்லி யிருக்கிறார். இங்கே தம்பி ஸ்டாலின் படித்த தீர்மானத்திலே கூட பிரச்சாரம் எப்படி அமைய வேண்டும் என்பதை சுட்டிக் காட்டியிருக்கிறார். மிக முக்கியமாக திண்ணைப் பிரச்சாரம் செய்யப்பட வேண்டும். திண்ணை இருக்கிறது, பேசுவதற்கு ஆள் இல்லையே என்று நினைக்கக் கூடாது. நீங்களே நான்கு பேர் அமர்ந்திருக்கக் கூடிய இடங்களிலே சென்று அவர்களுடன் அமர்ந்து பேசுவதற்கு முற்பட வேண்டும். தி.மு.க., அ.தி.மு.க. பற்றியெல்லாம் எடுத்துச் சொல்ல வேண்டும். அவர்களிலே ஒருவர் கேட்கக் கூடும், தி.மு.க. ஐந்தாண்டுகள் ஆண்ட கட்சி, சிமெண்ட் ரோடு, தார் ரோடு எல்லாம் போட்டிருக்கிறீர்கள். தண்ணீர் கொடுத்திருக்கிறீர்கள். இலவச வீடு கட்டிக் கொடுத்திருக்கிறீர்கள். அதெல்லாம் சரி, பணப்புழக்கம் என்று ஏதோ பேசிக் கொள்கிறார்களே, அது இல்லை என்கிறார்களே என்று கேட்கக் கூடும்.

சில நாட்களுக்கு முன்னால் ஒரு முக்கியமான நடிகர்– அவர் கட்சியைச் சேர்ந்த நடிகர் அல்ல– என்னிடம் மிகவும் அன்புள்ளவர்–பத்து நாட்களுக்கு முன்பு என்னிடம் பேசிக் கொண்டிருந்தார். நம்முடைய ஆட்சியைப் புகழ்ந்து பேசினார். பேசிவிட்டு அவரும் இப்படித்தான் பணப்புழக்கம் இல்லை என்கிறார்களே என்றார். நான் அவரிடம் பணப்புழக்கம் என்றால் என்ன என்றேன். அவருக்கு அதை விளக்கமாகச் சொல்லத் தெரியவில்லை. அதைப்போல பலரும் பணப்புழக்கம் என்ற வார்த்தையை திரும்பத் திரும்பச் சொல்கிறார்கள். நான் பணப் புழக்கத்தைப் பற்றி ஏற்கனவே முரசொலியிலே எழுதியிருக்கிறேன். மறுபடியும் அதைப்பற்றி சற்று ஆராய்ந்து புள்ளி விவரங்கள் எல்லாம் எடுத்துக் கொண்டிருக்கிறேன். இன்னும் இரண்டு நாட்களில் அதைப்பற்றி கடிதம் எழுதப் போகிறேன், அதையும் படியுங்கள்.

(கூட்டத்தில் இருந்த இளைஞர் அணித் தோழர் ஒருவர் நெல்லுக்கு அதிகம் விலை கொடுக்கவில்லை என்று பிரச்சாரம் செய்யப்படுவதை தலைவர் கலைஞரின் கவனத்திற்குக் கொண்டு வந்தார். அதற்கு கலைஞர் விளக்கம் அளித்தார்)

## நெல் கொள்முதலுக்கு மத்திய அரசு நிர்ணயித்த விலையைவிட அதிக விலை கொடுத்துள்ளது தமிழகம்

நெல்லுக்கு அதிக விலை கொடுக்கவில்லை என்கிறார்கள். ஆனால் கடந்த ஆண்டைவிட இந்த ஆண்டு மூன்று இலட்சம் டன் அதிகமாகக் கொள்முதல் செய்யப்பட்டுள்ளது. சென்ற ஆண்டு 15 இலட்சம் டன் மட்டுமே

கொள்முதல் செய்யப்பட்டதற்கு மாறாக இந்த ஆண்டு 18 இலட்சம் டன் நெல் கொள்முதல் செய்யப்பட்டுள்ளது. அது மாத்திரமல்ல, நெல் கொள்முதல் செய்வதற்கு மத்திய அரசு நிர்ணயம் செய்து அறிவித்திருக்கின்ற விலையை விட அதிக விலை கொடுத்தது நம்முடைய தமிழக அரசுதான். எப்படியென்றால் ஏகபோகக் கொள்முதல் செய்யும்போது மத்திய அரசு நிர்ணயித்த விலையைவிட 50 ரூபாய் இடைநிகழ்ச் செலவாக கூடுதலாக சேர்த்து விலை கொடுக்கிறோம். இணை கொள்முதல் செய்யும்போது இடை நிகழ்ச் செலவாக முன்பு 35 ரூபாய் கொடுத்ததற்கு மாறாக தற்போது 40 ரூபாய் மத்திய அரசு விலையை விட அதிகமாகக் கொடுக்கிறோம். வேறு எந்த மாநிலத்திலும் நாம் கொடுக்கின்ற விலை கிடையாது. நாம்தான் தருகிறோம். விவசாயத் தொழிலாளர்களின் கூலியை எடுத்துக் கொள்ளுங்கள். முன்பு விவசாயக் கூலி 19 ரூபாய் 20 ரூபாய்க்கு மேலே கிடையாது. தி.மு.க. ஆட்சி நூன்காவது முறையாக வந்த பிறகு கோலப்பன் ஐ.ஏ.எஸ். தலைமையிலே ஒரு குழு அமைத்து, விவசாயிகளின் கூலியை நிர்ணயம் செய்து அந்தக் குழுவை பரிந்துரை செய்யும்படி கேட்டுக் கொண்டோம். அந்தப் பரிந்துரையின்படி 19 ரூபாயாக இருந்த தினக் கூலி இன்றைக்கு விவசாயத் தொழிலாளர்களுக்கு ஆணாக இருந்தால் 54 ரூபாய், பெண்ணாக இருந்தால் 45 ரூபாய் என்று உயர்த்தியிருக்கிறோம். எப்படி பணப் புழக்கம் இல்லை என்று சொல்ல முடியும்? 19 ரூபாய் கூலி வாங்கிக் கொண்டிருந்தபோது பணப்புழக்கம் இருந்தது. 54 ரூபாய் கூலி என்கிறபோது பணப்புழக்கம் இல்லையென்று சொன்னால். இது மாயமா? மந்திரமா? அல்லது மாயா ஜாலப் பிரச்சாரமா?

அதே மாதிரி அலுவலர்களின் ஊதியம் மூன்று நான்கு மடங்கு தற்போது அதிகமாகியுள்ளது. மத்திய அரசு அலுவலர்களின் ஊதியத்தைப் போல மாநில அரசு அலுவலர்களுக்கு ஊதியம் தரவேண்டுமென்று கேட்டு அவ்வாறே மூன்று நான்கு மடங்கு சம்பளம் தரப்பட்டுள்ளது. நான் உதாரணமாகச் சொல்கிறேன். என்னுடைய செயலாளர் சண்முகநாதன் இருக்கிறார். நான் முதல் அமைச்சர், எனக்கு பத்தாயிரம் ரூபாய் மாதச் சம்பளம், அவருக்கு 24 ஆயிரம் ரூபாய் மாதச் சம்பளம், பணப்புழக்கம் இல்லை என்று எப்படிச் சொல்ல முடியும்? பணப் புழக்கம் நன்றாகத்தான் இருக்கிறது, வேண்டுமென்றே சொல்கிறார்கள். கறுப்புப் பணப் புழக்கம்தான் இல்லை. ஏன் இல்லையென்றால் ஒரு சட்டமன்ற உறுப்பினர் கடந்த ஆட்சியிலே ஒரு ஆட்டோவிலே ஒரு இடத்திற்குப் போவதாக வைத்துக் கொள்ளுங்கள், டாக்சி கிடைக்காததாலோ அல்லது அவர் போகின்ற இடம் ஏதோ ஒரு சந்து பொந்தில் இருக்கிறது என்பதாலோ ஆட்டோவில் செல்வதாக வைத்துக் கொள்ளுங்கள், எந்த இடம் என்பதை நீங்களே யூகித்துக் கொள்ளுங்கள் (சிரிப்பு) போய் இறங்கியவுடன் மீட்டரைப் பார்த்தால் 52 ரூபாய் ஆகியிருக்கும், இவர் ஓட்டுனரிடம் 100 ரூபாய் நோட்டை எடுத்துக் கொடுத்துவிட்டுப் போய் விடுவார், அவரால் எப்படி தாராளமாக அப்போது கொடுக்க முடிந்தது. அவர் யாரிடத்திலோ எதற்காகவோ அடித்த லஞ்சப் பணம் என்பதால் அந்த அளவிற்கு தாராளமாகக் கொடுத்தார். அதனால் அப்போது பணப் புழக்கம் இருந்தது. அப்படிப்பட்ட கறுப்புப் பணப்புழக்கம் இப்போது இல்லைதான். அதைப் போலவே அங்கீகரிக்கப்படாத நிலங்களை ஆக்கிரமித்து அதிலே பிளாட் போட்டு ரியல் எஸ்டேட் என்ற பெயரால்

விற்பார்கள். அங்கே உண்மையாக வாங்கியவன் வீடு கட்ட ஆரம்பிப்பான். இன்னொருவன் வந்து இது என் இடம் என்பான். இப்படிப்பட்ட தவறான விற்பனை காரணமாக பணப்புழக்கம் அப்போதிருந்தது இப்போது இல்லாமல் இருக்கலாம். அதுமாத்திரமல்ல; லண்டனில் ஓட்டல் என்ற பெயரால் ஆயிரம் கோடி ரூபாய் தமிழகத்தின் பணம் அங்கே போய் சுணங்கிவிட்டது. அது நம்முடைய பணம். அந்தப் பணம் இங்கேயிருந்தால் பணப்புழக்கம் அதிகமாக இருந் திருக்கும். மேலும், 400, 500 கோடி ரூபாய் ஜெயலலிதா வீட்டில் அடங்கிக் கிடக்கின்றது. பிறகு எப்படி பணப்புழக்கம் இருக்கும்? எனவே பணப்புழக்கம் இல்லை என்று யாராவது சொன்னால் நீங்கள் அவர்களிடம் விளக்க வேண்டியவைகள்தான் இவைகள்.

இப்போது எல்லாவற்றையும் விட்டு விட்டு இது ஒன்றைத் தான் பணப்புழக்கம் இல்லை என்பதைச் சொல்கிறார்கள். ஏனென்றால் தேர்தல் வந்துவிட்டது. பணம்புழங்கப் போகின்ற நேரம், அந்த நேரம் பார்த்து இதைச் சொல்கிறார்கள். குறை சொல்ல அவர்களிடம் வேறு எதுவும் இல்லை. வேறு ஏதாவது நம்மீது குறை சொல்லியிருக்கிறார்களா?

ஸ்டாலின் வீடு கட்டிவிட்டார் என்று ஒருவர் வழக்கு போடுகிறார். ஸ்டாலினே தானாகவே நீதிமன்றத்திற்குச் சென்று என்னை விசாரியுங்கள் என்று மனு கொடுத்துள்ளார். இது எங்கேயாவது உண்டா? என்னை விசாரியுங்கள் என்று யார் குற்றஞ்சாட்டப்பட்டாரோ அவரே நேரில் சென்று கேட்கின்ற துணிச்சல் திராவிட முன்னேற்றக் கழகத்துக்காரனைத் தவிர வேறு யாருக்கு இருக்கிறது? (கைதட்டல்) இதையெல்லாம் நீங்கள் பிரச்சாரத்திற்குப் பயன்படுத்திக் கொள்ள வேண்டும்.

ஐந்தாவது முறையும் நீ தான் முதலமைச்சர் என்று சொன்னீர்கள். நான் அதை ஏற்றுக் கொள்வதற்கு ஒரேயொரு காரணம் தான் உள்ளது. ஐந்தாவது முறையும் முதலமைச்சராக ஆனால் எடுபிடிகள், வாகனாதிகள், பவிசுகள், பாராட்டுகள், பெருமைகள் எல்லாம் கிடைக்கும் என்பதற்காக அல்ல. எனக்குக் கிடைத்த பெருமை, திருச்சி கல்லக்குடி போராட்டத்திலே தண்டவாளத்திலே படுத்தேன் அல்லவா, அதைப் பற்றி அண்ணா அவர்கள் "தண்டவாளத்திலே படு என்று சொன்னாலும், அமைச்சர் பதவியை ஏற்றுக் கொள் என்று சொன்னாலும் இரண்டையும் ஒன்றாகக் கருதுபவன் தான் என் தம்பி கருணாநிதி'' என்று அண்ணா சொன்னாரே, அதுதான் எனக்குப் பெருமை. இந்த அரியா சனம் அல்ல எனக்குப் பெருமை. ஆனால் ஐந்தாவது முறையும் நீ முதலமைச்சராக அமரு என்று சொல்லும்போது நான் ஒப்புக் கொள்ள ஒரு காரணம் இருக்குமேயானால் அது என்ன காரணமாக இருக்குமென்றால் சிறிய காரணங்கள்தான்.

உதாரணத்திற்குச் சொல்கிறேன். இங்கே திருச்சியில் உய்யக் கொண்டானில் வேலை ஆரம்பித்து விட்டோம். அதற்கு நாற்பது, ஐம்பது கோடி ரூபாய் செலவாகும். அது முடிவதற்குள் அப்படியே விட்டுவிட்டு நாம் போய், அந்த அம்மா வந்தார்கள் என்றால் அவ்வளவுதான், உய்யக் கொண்டான் என்னவாகும் என்று சொல்ல முடியாது. அதைப் போல நாங்குனேரியில் 8 ஆயிரம் கோடி ரூபாயில் பெரிய திட்டம், பிரமாண்டமான திட்டம், அதற்கு சிறப்புப் பொருளாதார அனுமதியும் மத்திய அரசு வழங்கியிருக்கின்றது. பத்தாண்டுகளுக்கு அங்கே வரி கிடையாது. அதற்குப் பக்கத்திலே குளச்சல் துறைமுகம் வரவுள்ளது. நாம் வாதாடி போராடி விரைவில் பிரதமர் வாஜ்பாய் அவர்கள் இங்கே அளித்த வாக்குறுதியின்படி சேது சமுத்திரம் திட்டமும் வந்து

விட்டால் சேதுசமுத்திரம், குளச்சல், நாங்குனேரி இது மூன்றும் சேர்ந்தால் தென் மாவட்டங்கள் பூலோகச் சொர்க்கம் என்பார்களே அதைப்போல ஆகிவிடும்.

இதையெல்லாம் அந்த அம்மையாரிடம் விட்டுச் சென்றால் நடக்குமா ? நாடு என்ன ஆகும் என்பதை எண்ணிப் பார்த்துத் தான் சரி, ஐந்தாவது முறையும் வரவேண்டுமென்று சொல்கிறீர்களா, நான் தேர்தலில் போட்டியிடுகிறேன் என்று நான் சொல்ல வேண்டியிருக்கிறதே தவிர, வேறு எனக்கொன்றும் அதற்கு ஆசையில்லை, எனக்கொன்றும் பதவியிலே தொடர வேண்டுமென்ற எண்ணம் நிச்சயமாக இல்லை என்பதை நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

## ஐந்தாண்டுகளில் நாம் ஆற்றிய பணிகளை எடுத்துக் கூறுங்கள்

வீராசாமி இங்கே சொன்னார், தார்ச் சாலை போட்டிருக் கிறோம், நெடுஞ்சாலைகளைப் போட்டிருக்கிறோம் என்றார். ஆனால் முழுமை பெறவில்லை. இன்னும் முழுமையாக அவைகளையெல்லாம் செய்து முடிக்க இன்னும் ஐந்தாண்டுகள் தேவை. அந்த ஐந்தாண்டுகளிலே இந்தப் பணிகள் எல்லாம் தொடர் பணிகளாக இருக்கக் கூடிய பணிகள் என்பதை மறந்துவிட முடியாது. கிராமங்களுக்கு குடிநீர் கொடுத்திருக்கின்றோம். ஆனால் முழுமையாக கொடுத்து விடவில்லை. அதைக் கொடுத்து தீர வேண்டும். அதற்கான முயற்சிகளை நாம் எடுத்தாக வேண்டும். நீங்கள் மக்களிடத்திலே செய்ய வேண்டிய பிரச்சாரம் முக்கியமானது. இவ்வளவு வேலைகள் நடந்திருக்கிறதே, மற்ற வேலைகளும் தொடர நாம் இருக்க வேண்டாமா, வேறு ஆட்கள் வந்தால் இந்த வேலைகள் எல்லாம் தொடருமா என்பதை யோசித்துப் பாருங்கள் என்றுதான் எடுத்துச் சொல்ல வேண்டும்.

கடந்த ஐந்தாண்டுகளில் என்ன நடைபெற்றது? இந்த ஐந்தாண்டுகளில் என்ன நடைபெற்றது? அடுத்த ஐந்தாண்டுகளில் என்ன நடக்க வேண்டும்? என்பதை நீங்கள் பாமர மக்களிடத்திலே, கிராம மக்களிடத்திலே பொது மக்களிடத்திலே, வாக்காளப் பெருமக்களிடத்திலே எடுத்துச் சொல்ல வேண்டும். சின்னங்கள் எழுதுவது பெரிதல்ல, உதய சூரியனுக்கு வாக்களியுங்கள் என்று உரக்க உரக்க ஒலிப்பது பெரிதல்ல, வாக்களிக்கக் கூடிய வாக்காளர்களை சேர்க்க வேண்டும், இப்போதே நீங்கள் பிரித்துக் கொள்ள வேண்டும், யார் யார் எந்தெந்த பகுதியிலே இந்தத் தேர்தல் முடிகின்ற வரையிலே பணியாற்றுவது என்பதை இப்போதே குழுக்களாகப் பிரிந்து ஆங்காங்கு இருக்கின்ற கழகத்தின் நிர்வாகிகளுடன் இளைஞர் அணி தம்பிமார்கள் கலந்து பேசி என்னை இந்தப் பகுதியிலே நியமியுங்கள், என்னை இந்தப் பகுதிக்குப் போடுங்கள், அங்கிருந்து நான் தொடாந்து தேர்தல் முடிகிற வரையிலே வாக்கு எண்ணிக்கை முடிகிற வரையிலே அங்கேயே வேலை செய்கிறேன், அந்த 'பூத்'லேயே இருக்கிறேன் என்று நீங்களாகச் சென்று வலியச் சொல்லி கழக நிர்வாகிகளிடம் அந்த அனுமதியைப் பெற்று பணிகளை ஆற்ற வேண்டும்.

தேர்தலிலே யார் நிற்கிறார்கள் என்பதல்ல. தேர்தலிலே கருணாநிதி நிற்கிறார் என்று கூட எண்ண வேண்டாம். உதய சூரியன் அல்ல, அண்ணா நிற்கிறார் என்று நினைத்துக் கொள்ளுங்கள். அண்ணாவின் பெயரையே கூறுகிறேன், ஏனென்றால் அண்ணாவின் பெயரைக் கூறியே அண்ணாவை அழித்துக் கொண்டிருக்கிறார்கள். பெரியாரின் பெயரைச் சொல்லியே பெரியாரை அழித்துக் கொண்டிருக்கிறார்கள். அதற்கு இடம் தரக்கூடாது.

தமிழ்நாட்டிற்கு ஜெயலலிதா தலைமையா என்று கேட்டு, காரசாரமாக விடுதலையிலே தலையங்கம் எழுதி ஐந்தாறு ஆண்டுகளுக்கு முன்பு வெளியிட்ட நண்பர் வீரமணி அவர்கள் ஜெயலலிதா தலைமைதான் தமிழ்நாட்டிற்கு வேண்டும் என்று இன்றைக்கு பாடுபட்டுக் கொண்டிருக்கிறார். யாரோடு சேர்ந்து என்பது உங்களுக்கெல்லாம் தெரியும். எனவே பெரியாரையும் ஒழித்துக் கட்ட அண்ணாவையும் ஒழித்துக் கட்ட இப்படிப்பட்ட சூழ்ச்சிகள் இன்றைக்கு நெய்யப்படுகின்றன. நெய்யப்படுகின்ற அந்தச் சூழ்ச்சிகளையெல்லாம் அறுத்தெறிய வேண்டிய கட்டாயம், கடமை நமக்கிருக்கின்றது. அந்தத் தொண்டினை நீங்கள் ஆற்றிட வேண்டும். அதற்கிடையே ஒருவருக்கொருவர் ஏற்படுகின்ற காழ்ப்புகளையெல்லாம் கண நேரத்திலே மறந்து விடுங்கள், அவைகளைப் பெரிதுபடுத்தாதீர்கள். பெரியவர்களிடத்திலே கருத்து வேறுபாடு இல்லை என்று நான் சொல்ல மாட்டேன், இளைஞர்களிடத்திலும் கருத்து வேறுபாடு வரும் எனக்குத் தெரியாதது அல்ல. அந்தக் கருத்து வேறுபாடுகளுக்கு நீங்கள் இடம் தராதீர்கள். நீங்கள் ஒற்றுமையாக இருந்தால்தான் ஒன்றுபட்டு இருந்தால்தான், கட்டுப்பாட்டோடு இருந்தால்தான். நீங்கள் மற்றவர்களைத் திருத்துவதற்கான தகுதியைப் பெறுபவர்களாக ஆவீர்கள். அந்தத் தகுதியைப் பெறுங்கள் என்று கேட்டுக் கொண்டு இந்த இனிய நிகழ்ச்சியிலே உங்களையெல்லாம் காண்கின்ற அருமையான சந்தர்ப்பத்தைத் தந்து, இவ்வளவு தம்பிகளை ஒரே இடத்திலே காணக் கூடிய நல்ல நிலை ஏற்பட்டதற்காக மகிழ்ச்சி அடைந்து விடைபெற்றுக் கொள்கிறேன்.

– திருச்சியில் 3–3–2001 அன்று நடைபெற்ற கழக இளைஞர் அணி அமைப்பாளர்கள் – துணை அமைப்பாளர்கள் கூட்டத்தில் தலைவர் கலைஞர் அவர்கள் ஆற்றிய உரை.

* * * * * * * * * *

## இளைஞர் அணிக்கு -
## கலைஞர் அறிவுரை!

அண்ணா வழி நில்!
ஆற்றுக பொதுப்பணி!
இலக்கியம் புதுக்கிடு!
ஈனரை ஒதுக்கிடு!
உயிர், தமிழாம் உணர்ந்திடு!
ஊழலை நொறுக்கிடு!
எட்டப்பர் இகழ்ந்திடு!
ஏறுபோல் வீறுகொள்!
ஐயம் களைந்து அறிவைப் பயிர் செய்!
ஒழுக்கம் போற்றிடு!
ஓம்புக மெலியோரை!
ஔவைக் குலம் போற்று!
கழகம் வில்லாம், நின் அணியே கணையாம்!
சாதியை விடுத்து சமத்துவம் முழக்கு!
ஞாயிறு வாழ்த்தி நாளும் உழைத்திடு!
தனியுடமை தகர்த்திட தடந்தோள் தட்டு!
நாடு வாழ நலிவு தீர்த்திடு!
பகைவர்க்கு வளையேல்!
மாயைக்கு மயங்கேல்!
வாய்மையே போர்வாள்!
யானைபோல் பயன்படு!
“ழ” கரமாய்ச் சிறப்புறு!

ரோஜா முத்தையா... 




சில்வர் ஸ்டிரீக், சென்னை - 14


ARASU ARTS